**2018-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 5.00 மணிக்கு பவானி நகர்மன்றத்தின் சாதாரண கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் கூட்டப்பொருட்கள் விபரம்**

1. இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள IHSDP கடை எண். 18-க்கு 28.11.2018 ஆம் தேதியில் மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.4100/-க்கு திருமதி. ஆர்.பாரதி என்பவரால் ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.92, நாள்: 03.07.2007 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( ந.நி.4) துறை அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி, அதாவது நகராட்சி கடைகளை ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடலாம். 3 ஆண்டுகள் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு முடிவடைவதன் பேரில் அக்குத்தகை தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படலாம். இவ்வாறாக 9ஆண்டுகாலம் புதுப்பிக்கப்படும். ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15% உயர்த்தப்படும் என்ற நிபந்தனைகளுடன் உயர்ந்தபட்ச மாத வாடகை ரூ.4100/-( ஒப்பந்தப்புள்ளி தொகை) கோரப்பட்ட திருமதி ஆர்.பாரதி என்பவருக்கு உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மாத வாடகை ரூ.4100/- மற்றும் சேவை வரி 18% ரூ.738/- மொத்தம் ரூ.4838/- பிரதி மாதம் 10-ம் தேதிக்குள் வாடகை செலுத்த வேண்டும் என்றும், 12 மாத வாடகை முன்பணமாக செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் உயர்ந்தபட்ச மாதவாடகை ரூ.4100/-கோரிய திருமதி ஆர். பாரதி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1707/2017/அ2)

2. வார்டு எண். 1-ல் 5 இடங்கள், வார்டு எண்.2-ல் , 2 இடங்கள், வார்டு எண். 3-ல் 3 இடங்கள், வார்டு எண். 8-ல் 1இடம், வார்டு எண். 17-ல் 1 இடங்களில் புதிய தெருவிளக்குகள் பொருத்த மின் வாரியத்தை கேட்டுக் கொண்டதில் அதற்கான கட்டணமாக ரூ.85900/- கேட்பு வரப்பட்டுள்ளது. இத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:
அனுமதிக்கலாம். (ந.க.எண்.1417/2018/இ1)

3. பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24, பழைய பேருந்து நிலையத்தில் உள்ள பொது கழிப்பிடத்தின் ஆழ்துளைக்கிணற்றில் புதிய 1.5HP நீர் மூழ்கி மோட்டார் பொருத்துதல் பணிக்கு மதிப்பீடு ரூ.0.60 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.316 நாள்: 30.10.2018-ல் அனுமதி அளித்துள்ளதன் பேரில் 23.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எம்.முருகேசன் | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு 0.42% |
| 2 | திரு. சின்னுசாமி | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் 1.87% |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.42% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம். முருகேசன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1777/2018/ இ1)

4. பவானி நகராட்சி வார்டு எண். 24 மக்கான் தெருவில் தண்ணீர் வசதி செய்ய HDPE தொட்டி அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.0.60 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.317 நாள்: 30.10.2018-ல் அனுமதி அளித்துள்ளதன் பேரில் 23.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு.பி.ஏ.செல்லப்பன் | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு 0.43% |
| 2 | திரு. எஸ்.பாலசுப்ரமணியன் | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் 1.95% |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.43% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.ஏ.செல்லப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1778/2018/ இ1)

5. பவானி நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் சாலைகளில் உள்ள கட்டிடங்களின் debris, மண் மற்றும் கற்கள் ஆகியவற்றை JCB இயந்திரம் மற்றும் டிரேக்டர் வாகனம் கொண்டு அகற்றும் பணிக்கு மதிப்பீடு 0.50 இலட்சத்திற்கு நகர்மன்றதீர்மான எண்.318 நாள்: 30.10.2018 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 29.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எம். அப்புசாமி | ரூ.50,000/- | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு 0.50% |
| 2 | M/s R.N.& Co., Erode | ரூ.50,000/- | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் 1.98% |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.50% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம். அப்புசாமி, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1779/2018/ இ1)

6. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 30HP Raw Water Turbine Motor Pump No.1 ன் Pump பழுது நீக்கம் செய்யும் பணிக்கு மதிப்பீடு 2.45 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 319 நாள்: 30.10.2018 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 29.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | M/s. குருஎலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் ,ஈரோடு. | ரூ.2,45,000/- | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு 0.24% |
| 2 | M/s. ஸ்ரீ வேல் எலக்ட்ரிக்கல் ,ஈரோடு. | ரூ.2,45,000/- | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் 1.62% |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.24% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. குருஎலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் ,ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1748/2018/ இ1)

7. பவானி நகராட்சியின் திட்டப்பணிகள் மற்றும் திட்டப்பணிகள் சம்பந்தமான பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் போன்றவை “ நாளிதழில்” விளம்பரம் செய்த விபரம் கீழ்கண்டவாறு

| வ. எண். | நாளிதழ் விபரம் | விளம்பர விபரம் | பட்டியல் எண்/ நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1) | “தினபூமி” கோயமுத்தூர் | 840/2018//இ1 நாள்: 27.09.2018 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு | 70425/29.9.2018 | ரூ.11,844/- |
| 2 | “Accord, Advertising Agency சென்னை | 1390/2018/E1, Dt: 28.9.2018 Notice Inviting for expression of Interest ( EOI) | AAA/0698/18-19 Dt: 05.10.18 | ரூ.36,383/- |
| 3 | “Accord, Advertising Agency சென்னை | 1240/2018/E1/12.11.18 (MCC. ward.11) | AAA/0893/18-19 Dt: 17.11.18 | ரூ.23,678/- |
| | | | மொத்தம் : | ரூ.71,905/- |

மேற்படி விளம்பரக்கட்டணத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மேற்கண்ட விபரப்படி நாளிதழ்களுக்கு பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். (ந.க.எண்.1777/2018/ இ1)

8. இந்நகராட்சியின் திட்டப்பணிகள் சம்பந்தமான விளம்பரத்தினை கீழ்கண்ட நாளிதழ்களின் தொழில்மலரில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | நாளிதழ் | பட்டியல் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | “தினகரன்” தொழில் மலர்-2018 | 3300/12066 18-10-2018 | ரூ.9500/- |
| 2. | “தினமணி” தொழில் மலர் -2018 | CBETN40061291 18.10.2018 | ரூ.9990/- |

மேற்கண்ட விபரப்படி உள்ள தொகையினை அந்தந்த நாளிதழ்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். (ந.க.எண்.820/2018/ இ1)

9. பவானி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018-19 ன் கீழ் குப்பை கிடங்கில் உள்ள பழைய குப்பைகளை ($33556 m^3$) Bio - mining முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ. 221 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -5 அவர்களின் கடித ந.க.எண். 22866/பி3/2018, நாள்: 23.08.2018 -ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி கடித ந.க.எண். 18281/2016/Do1 நாள்: 24.08.2018-ல் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 18.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திருவாளர் Shree Bommu Industries, Coimbatore அவர்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை தொடர்ந்து 22.10.2018 -ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கு தலைமை பொறியாளர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதி கடிதத்தின் நிபந்தனைகளில் மேற்கண்ட பணியின் ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய ஒவ்வொரு பணியின் நிலைப்பட்டியலுக்கும் அரசு பொறியியல் கல்லூரி அல்லது அண்ணா பல்கலைக்கழகம் அவர்களின் மூலம் survey செய்யப்பட்ட வேலையின் அளவின் அறிக்கை பெற்று ( Third Party Verification ) தொகை வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே Third Party Verification செய்ய ஆகும் உத்தேச தொகை ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்
3. அண்ணா பல்கலைக்கழகம் அவர்களின் மூலம் சர்வே செய்யப்பட்ட வேலையின் அளவின் அறிக்கை பெற்று (Third Party Verification ) தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்

10 . தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட தகவல், கல்வி, தொடர்பு பணி போன்றவற்றை மேற்கொள்ள ஏற்கனவே நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களால் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு ஆள் வெளிக்கொணர்வு முகமை மூலம் இந்நகராட்சிக்கு பரப்புரையாளர்கள் 7 பேர் மற்றும் மேற்பார்வையாளர் ஒருவர் என்ற அடிப்படையில் SKY Manpower Agencies, திண்டுக்கல் நிறுவனத்தினர் மூலம் 30.11.2018ஆம் தேதி வரை பணியாளர்களை வழங்கிட உத்திரவிடப்பட்டு அந்நிறுவனத்திடமிருந்து பணியாளர்கள் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க. எண். P1/26458/2016, நாள் : 13.11.2018ஆம் தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மேற்படி ஒப்பந்த பணிகாலத்தினை 31.08.2018 ஆம் தேதியிலிருந்து 31.08.2019 ஆம் தேதி முடிய கால நீட்டிப்பு செய்து அப்பணியாளர்களை தொடர்ந்து பயன்படுத்தி பணி மேற்கொள்ளுமாறும், அதற்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட்டு பின்பு திட்ட நிதியிலிருந்து தொகை பெறப்பட்டவுடன் அதனை சரிசெய்து கொள்ளுமாறும் தெரிவித்துள்ளதால் மேற்படி பணியாளர்களை 01.12.2018 முதல் 31-08-2019 வரை SKY Manpower Agencies, திண்டுக்கல் நிறுவனத்தினரிடமிருந்து பணியாளர்களைப் பெற்று பணி மேற்கொள்வதற்கும் அதற்கான பட்டியல் தொகை பொது நிதியிலிருந்தும் வழங்குவதற்கும், திட்ட நிதியிலிருந்து தொகை வரப்பெற்றவுடன் அதனை சரிசெய்து கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.631/2018/எச்1)

(ஓம்) திரு.க.கதிர்வேல்
தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
பவானி நகராட்சி